# வருடாந்த பரிசளிப்பு விழா

## 2009 - 2010

# ASDA

ஆரையம்பதி
சமூக அபிவிருத்திச் சங்கம்
மட்டக்களப்பு.

**15.05.2010**

# ஆனந்தா ஸ்ரோஸ்

பிரதான வீதி, ஆரையம்பதி.





காஸ் (*Gas*), சோடா வகைகள்,

மற்றும் பால்மா வகைகள்

என்பவற்றை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

மற்றும் சகல விதமான பலசரக்கு பொருட்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்







## *Anantha Stores*

Main Street,
Arayampathy.

# *K.R. Pharmacy*

*Main Street,*
*Arayampathy - 01,*
*Batticaloa.*
*Tel : 065 - 3644002*







எம்மிடம் சகல ஆங்கில மருந்துகளை மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக் கொள்வதுடன்
குழந்தைகளுக்குத் தேவையான குளோன்,
சோப் வகைகள், பால்மா வகைகள்,
விஸ்கட்களையும் பெற்றுக்கொள்ளலாம்,

அத்துடன் இரத்தம், சிறுநீர் மாதிரிகள் ஏற்றுக்
கொள்ளப்பட்டு பரிசோதனை செய்து கொடுக்கப்படும்.

## தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே !
வானமளர்ந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே !

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே !
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே !

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே !
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே !

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ் மொழியே !
வானம் அறிந்த தனைத்தும் மறிந்து
வளர்மொழி வாழியவே !

- மகாகவி பாரதியார்

# ஆசியுரை

எல்லா நலன்களும் பெற எல்லாம்
வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

செய்பவன் கருவி, நிலம், செயல், காலம் செய்பொருள் ஆறும் தருவது வினையே (செயலே) என்பது நன்நூல் எனும் தமிழ் இலக்கண நூல் கூறும் அறிவுரையாகும்.

இந்த அறிவுரையில் இடம்பெறும் விடயங்கள் ஆறும் எந்த முயற்சிக்கும் அடித்தளமாகும் என்பது பகிரங்க உண்மையாகும். இந்த உண்மையை உள்வாங்கி உணர்ந்து உறுதியாய் செயற்பட்டால் எந்த நற்செயலும் முழுமைப் பயனைத் தரும்.

1957ம் ஆண்டில் ஆரையம்பதி நலவளர்ச்சிக் கழகம் என்ற பெயருடன் (கடிதத் தலைப்புடன்) ஒரு சங்கம் செயற்பட்டு வந்தது என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன். இந்தக் கழகத்தின் தொடர்ச்சியான முயற்சியால் உருவானதே செல்வா நகராகும்.

எனவே, இங்கு கூறியவற்றை உள்ளத்தில் வைத்து ஆரையம்பதி சமூக அபிவிருத்திச் சங்கம் **(ASDA)** செயற்பட எல்லாம் வல்ல இறைவனைப் பிராரத்திக்கின்றேன்.

**க. அமரசிங்கம்** (J.P) (ஆசிரியர்)
முன்னாள் தவிசாளர், மண்முனைப்பற்று.
மட் / ஆரையம்பதி.
*10.05.2010*

## ஆரையம்பதி


## சமூக அபிவிருத்தி அமைப்பின் உறுப்பினர்கள்

## நிறைவேற்றுக் குழு - 2010

| | |
|---|---|
| **திரு. N. சுசாதரன்** | *(தலைவர்)* |
| **திரு. P. சுரேஸ்** | *(உப தலைவர்)* |
| **திரு. P. புஸ்பராசா** | *(உப தலைவர்)* |
| **திரு. S. மகேந்திரலிங்கம்** | *(பொதுச் செயலாளர்)* |
| **திரு. S. S. இராமச்சந்திரன்** | *(இணைச் செயலாளர்)* |
| **திரு. G. பத்மநாதன்** | *(இணைச் செயலாளர்)* |
| **திரு. S. மாணிக்கராசா** | *(பொருளாளர்)* |

## செயற்குழு அங்கத்தவர்கள்

**திரு. K. பரமானந்தம்**
**திரு. V. வரதராஜன்**
**திரு. A. பூரணகுமார்**
**திரு. S. சிவலிங்கம்**
**திரு. K. கிருபானந்தம்**
**திரு. T. சிவராசா**
**திரு. S. நகுலேஸ்வரன்**
**திரு. K. தவேந்திரராசா**
**திரு. S. ஜெயக்குமார்**
**திரு. A. மகேசானந்தம்**
**திரு. P. நரேந்திரன்**
**திரு. S. A. சுரேஸ்**
**திரு. S. கோணலிங்கம்**
**திரு. K. உதயகுமார்**
**திரு. S. கமல்ராஜ்**



ஆரையம்பதி சமூக அபிவிருத்தி அமைப்பு உறுப்பினர்கள்.

# கல்வியியல் வளர்ச்சியும், நகர்ப்புற பாடசாலைகளின் பங்கும்

ஆரையம்பதி என்னும் கிராமமானது இன்று அபிவிருத்தி அடைந்துவரும் ஒரு பிரதேசமாகும். இவ் ஆரையம்பதியின் மாணவர்கள் கடந்த காலங்களில் நிகழ்த்திய சாதனைகளும் அடைந்த சமூக நிலைகளும் அளப்பரியனவும் வரலாற்று சிறப்பு மிக்கவையுமாகும். இந்த சாதனைகளின் உச்ச வேகமானது இன்று மந்தகதியை அடைந்துள்ளமையானது மிகவும் கவலைக்குரியதும் கவனத்திற்கு கொண்டு வரவேண்டியதுமான முக்கிய விடயமாகும்.

ஒரு பிரதேசத்தின் கல்வி நிலை வளர்ச்சியை கணிப்பிடும் அலகுகளாக ஐந்தாம் ஆண்டு புலமைப்பரீட்சைப் பெறுபேறுகள், க.பொ.த. (சா/த) பரீட்சைப் பெறுபேறுகள், க.பொ.த (உ/த) பரீட்சையுடான பல்கலைக்கழக அனுமதிகள் என்பன பிரதானமாக கருதப்படுகின்ற போதிலும் பல்கலைக்கழக அனுமதியே மிகவும் செல்வாக்குச் செலுத்தும் காரணியாக உள்ளது. எமது ஆரையம்பதி பிரதேசத்தில் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களின் எண்ணிக்கையும் கணிசமான அளவு ஏற்றுக்கொள்ளக் கூடிய வரையறைகளுள் இருந்தாலும் க.பொ.த (உ/த) பெறுபேறுகளும் பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கையும் திருப்திகரமாக இல்லாமை மிகவும் வேதனைக்குரிய விடயமாகவே உள்ளது.

இதற்கு ஆதாரமாக சில உதாரணங்களைக் குறிப்பிடலாம் சுமார் ஏறத்தாள 26 வைத்தியர்களையும் 07 மருத்துவ பீட மாணவர்களையும், உருவாக்கியுள்ளது. எமது ஆரையம்பதி பிரதேசமானது மட்டக்களப்பு மாவட்டத்தில் வைத்தியத்துறையில் வைத்தியர்களை உருவாக்குவதில் ஒரு சிகரமாக திகழ்ந்துள்ளது. வருடா வருடம் ஓரிரு மருத்துவ பீட மாணவர்களை தோற்றுவித்த பிரதேசத்தில் 1997ம் ஆண்டில் ஒரு புதியதிருப்பமாக 03 பேர் தெரிவாகியிருந்தனர்.

பின்னர் இவ் எண்ணிக்கை 1998ம் ஆண்டு 04 ஆக மாறி 1999ம் ஆண்டு இரண்டாக காணப்பட்டது இக்காலப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வைத்திய மாணவர்கள் தெரிவு செய்யப்படுவதற்குரிய கோட்டா 11 என்பது குறிப்பிடத்தக்கது. எனவே எமது அனுமதி பெறும் விகிதத்தை கணிப்பிட்டுப் பார்க்கும் போது 27% மாக இருந்தது 35% ஆக மாறி பின் 18 % ஆகியது. இது மிகவும் திறமையான ஒரு சாதனையாகும். அத்துடன் அனைத்து மருத்துவபீட மாணவர்களும் யாழ் மருத்துவ பீடத்திற்கே தெரிவாகினர்.

இக்காலப்பகுதியில் யாழ் மருத்துவபீடத்திற்கு மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்து மாணவர்கள் தெரிவானார்கள். இம்மாணவர்களுக்கும் அங்குள்ள விரிவுரையாளர்கள் பலருக்கும் மட்டக்களப்பே தெரியாது இருந்தும் இம்முறை ஆரையம்பதியிலிருந்து எத்தனைபேர் தெரிவாகியுள்ளனர் என்று கேட்குமளவிற்கு யாழ் மருத்துவபீடத்திலேயே சாதனை படைத்து குறிப்பிட்ட இடத்தை தக்க வைத்துக் கொண்டமை என்பது ஒரு பெரிய சாதனையாகும். இதேபோல் மற்றைய பீடங்களில் கூட குறிப்பிடத்தக்க அளவு சாதனைகளை எமது மாணவர்கள் நிகழ்த்தியிருந்தார்கள்.

ஆனால் இன்று அனைத்து துறைகளிலிருந்தும் பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கையும், சதவீதமும் மிக மிக குறைவாகவே உள்ளது. இதற்கான காரணங்களை நாம் கண்டறிந்து நிவர்த்தி செய்தாலேயே நாம் மீண்டும் பல சாதனைகளை நோக்கிய பயணத்தை தொடரலாம்.

இப்பாதிப்புக்களில் மிகவும் பிரதான பங்கு வகிப்பது மாணவர்களின் கவனங்கள் கல்வித் துறையிலிருந்து சிதறடிக்கப்படுவதே. உதாரணமாக சினிமாத்துறையின் பாதிப்புக்கு மாணவர்கள் அதிகம் ஈர்க்கப்படுவதால் பலாத்காரப்போக்கும், ரௌடிசமும் மாணவர்களிடையே விதைக்கப் படுகின்றது. அத்துடன் இளவயதிலேயே மதுபோதை பழக்கத்திற்கு ஆளாவதும்

இவ்வீழ்ச்சிக்குரிய பிரதான காரணிகளாகும். எனவே பெற்றோர்கள், பொது அமைப்புக்கள் இவ்விடயங்களில் விசேட கவனம் செலுத்துதல் இன்றியமையாததாகும்.

இது இவ்வாறிருக்க இன்னுமொரு பிரச்சினையாக நகர்ப்புற பாடசாலைகளில் எமது பிரதேச மாணவர்களை அனுமதிப்பதற்கு சில மறைமுகமான தடைகளை எமது உள்ளூர் அரசியல்வாதிகள் சிலர் தங்களின் சுயநலத்திற்காக நடைமுறைப்படுத்தியதை அடுத்து எமது மாணவர்களுக்கு குறிப்பாக மட்/ வின்சன்ற் மகளிர் தேசிய பாடசாலையில் அனுமதி மறுக்கப்பட்டது. பின் இது எமது ASDA வின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து சரியான நடைமுறை சாத்தியமான, சட்டரீதியான விளக்கங்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கியதையடுத்து இத்தடை நீக்கப்பட்டது. என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். ஏனெனில் கல்வியியல் வளர்ச்சியில் இந்நகர்ப்புற பாடசாலைகளின் பங்கு அளப்பரியது அதாவது சிறந்த திறமையான வழிகாட்டலும் போதுமான ஆய்வுகூட வசதியும், பல உயர்நிலை மாணவர்களை உருவாக்கிய அனுபவமும் இப்பாடசாலைகளுக்கு உண்டு. அத்துடன் கல்வியின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் போட்டி என்பது மிகவும் முக்கியமானதாகும். இந்நகர்ப்புறப் பாடசாலைகளில் இப்போட்டிகளுக்குப் பஞ்சமே இல்லை எனவே எமது மாணவர்கள் அதிகூடிய பெறுபேறுகளைப் பெறுவதற்குரிய வாய்ப்புக்கள் அதிகம் உள்ளது.

இதேபோல் இக்காலப்பகுதியானது முன்னொரு போதும் இல்லாதது போல் மனித உரிமைகளுக்கும் அதன் மீறல்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் காலப்பகுதியாகும். எனவே அனுமதி மறுத்தல் என்பது ஒரு மாணவரின் அடிப்படை உரிமை மீறல் எனவே அம்மாணவர்களோ அல்லது அவர்களின் பெற்றோர்களோ நீதிமன்றம் செல்லும் வாய்ப்பும் உள்ளது. மேலும் ஒரு மாணவனின் இலட்சியங்களில் ஒன்று அவன் குறிப்பிட்ட பாடசாலையில் படிக்க வேண்டும் என்பது எனவே அவன் எந்தப் பாடசாலையில் கல்வி கற்க வேண்டும் என்பது பெற்றோரினால் அல்லது அம்மாணவனால் தீர்மானிக்கப்பட வேண்டியதொன்றாகும். இவ்விடயங்களை மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதும் நகர்ப்புறப் பாடசாலையின் அனுமதிக்கு ஆதரவு தெரிவிப்பதுமானது

எமது பிரதேசத்திலுள்ள மட்/ ஆரையம்பதி மகா வித்தியாலயத்தில் உருவாக்கப்பட்டுள்ள க.பொ.த (உ/த) விஞ்ஞானப் பிரிவை ஆதரிக்காமை என்பது அர்த்தப்படாது நாள் நடைமுறை யதார்த்தத்தையே நியாயப் படுத்துகின்றேன்.

மேலும் எமது பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட க.பொ.த உயர்தர விஞ்ஞானப் பிரிவை நாம் மிகவும் வரவேற்கின்றோம். உண்மையில் நான் அதிபருடன் வசதிகள் பற்றி வினவியபோது அங்கு உள்ள ஆய்வுகூடம் க.பொ.த (சா/த) வகுப்புக்களின் பரிசோதனைக்கே போதுமானதல்ல என அறிந்தேன். எனவே நாம் இப்பாடசாலையில் அடிப்படை வசதிகளையும் ஆய்வுகூட வசதிகளையும் அதிகரித்து இன்னும் திறமையாக வகுப்புக்களை நடாத்தி மாணவர்களை கவர்ந்து எமது பிரதேசத்தில் ஒவ்வொரு துறைகளிலும் கல்வி கற்க வழிவகை செய்ய வேண்டும். இது ஒரு நீண்டகாலப் பகுதியிலேயே நடைமுறையில் சாத்தியமாகும்.

எனவே நாம் மாணவர்களையும், பெற்றோர்களையும் கவர வேண்டுமே தவிர வலுக்கட்டாயமாக தடைகளை ஏற்படுத்தி அவர்கள் உணர்வுகளையும், உரிமைகளையும் மழுங்கடிக்கக் கூடாது. மண்முனைப்பற்றுப் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியில் **ASDA** மிகவும் அர்ப்பணிப்புடனும், உறுதியுடனும் செயற்படும் என்பதை **ASDA** சார்பாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

**Dr. P. சுரேஸ்**
ஆரையம்பதி.

## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2009

| இல | பெயர் | பாடசாலை | புள்ளி |
|---|---|---|---|
| 01. | வ. தனுலக்ஷன் | புனித மிக்கேல் கல்லூரி | 172 |
| 02. | ர. கௌசல்யா | ஆரை/நவரெட்ணராஜா வித்தி. | 177 |
| 03. | கோ. லோஜினி | நொத்தாரிஸ் | 144 |
| 04. | சு.தர்ஷிக்கா | நொத்தாரிஸ் | 146 |
| 05. | ப. ரஜிந்தன் | நொத்தாரிஸ் | 149 |
| 06. | ஸ்ரீ. சரண் | நொத்தாரிஸ் | 168 |
| 07. | பா. மெலோன்பிரவின் | நொத்தாரிஸ் | 139 |
| 08. | அ. ஆஷா | ஆரை / மகா வித்தி | 142 |
| 09. | ர. பிருத்திகா | ஆரை / மகா வித்தி | 144 |
| 10. | ஜெ. ஜெயப்பிரதிப் | ஆரை/ மகா வித்தி | 151 |
| 11. | ஆதித்தியன் | ஆரையம்பதி RKM | 146 |
| 12. | ச. யுவசங்கரி | ஆரையம்பதி RKM | 151 |
| 13. | ர. நிலோஜன் | ஆரையம்பதி RKM | 143 |
| 14. | ப. ஷிரோமி | ஆரையம்பதி RKM | 150 |
| 15. | செ. டனுக்ஷிகா | மட்/வின்சன்ற் மகளிர் உ..பா | 158 |
| 16. | சீ. அபிநயா | கல்லடி RKM | 164 |
| 17. | கி. றெபேக்கா | சென். சிசிலியா பெண்கள் பாட | 140 |
| 18. | சோ. ஸத்ஜஹான் | ஆ/ சுப்ரமணிய வித்தி | 146 |
| 19. | சு. டஜானிக்கா | தா / ஸ்ரீ விநாயகர் வித்தி | 139 |
| 20. | சு. மிதுஷிக்கா | தா/ ஸ்ரீ விநாயகர் வித்தி | 148 |

| | | | |
|---|---|---|---|
| 21. | அ. மிதுக்ஷா | தா / ஸ்ரீ விநாயகர் வித்தி | 139 |
| 22. | லோ. ஹரிப்பிரசாத் | மட்/ சிவானந்தா வித்தி | 145 |
| 23. | ச. பவித்திரன் | மட்/ சிவானந்தா வித்தி | 150 |
| 24. | ச. தட்சாயண் | ஆ/ சிவமணி வித்தி | 150 |
| 25. | யோ. சுமிதா | ஆ/ சிவா வித்தி | 149 |
| 26. | மோ.பிரகாஷ் | புது / கண்ணகி வித்தி | 147 |
| 27. | அ. கோபிகா | கோட்/ கனிஷ்ட வித்தி | 146 |
| 28. | அ. தனுராஜினி | கிரான் / விநாயகர் வித்தி | |
| 29. | சு. யுகந்தன் | கிரான் /சரஸ்வதி வித்தி | |
| 30. | த. ரஜிகரன் | கிரான் / சரஸ்வதி வித்தி | |
| 31. | ச. றிஷோத்திகா | கிரான் / சரஸ்வதி வித்தி | |
| 32. | கே. றொஹான் | புனித / மிக்கேல் கல்லூரி | |
| 33. | வ. தனுலக்ஷன் | " | |



## கல்விப் பொதுத்தராதர (சா/த) பரீட்சை - 2009

| | பெயர் | பாடசாலை | புள்ளி |
|---|---|---|---|
| 01. | சு. சாகித்யா | ஆரை/ இராம கிருஷ்ண மிஷன் | 9A |
| 02. | ஸ்ரீ. மோகனதர்சன் | மட்/ சிவானந்தா வித்தி | 8A,B |
| 03. | எஸ். ரிச்ஹயனி | புனித சிசிலியா | 7A,2B |
| 04. | உ. ஹர்ஜினி | ஆரை/ இராம கிருஷ்ண மிஷன் | 7A, B,C |
| 05. | தே.பிரியங்கா | மட்/ வின்சன் மகளிர் உ. பாட | 8A,B |
| 06. | ரி. ஜதுஸ்கா | புனித சிசிலியா | 6A,3B |
| 07. | ஜெ. துவாரகன் | மட்/ மத்திய கல்லூரி | 6A,3B |
| 08. | எம்.கிருஷ்ணகுமாரி | கல்லடி இராமகிருஷ்ண மிஷன் | 6A,3B |
| 09. | ப. கவிவாசன் | புனித மிக்கேல் கல்லூரி | 4A,5B |
| 10. | த. துஷ்யா | கல்லடி இராமகிருஷ்ண மிஷன் | 6A,B,2C |
| 11. | ஆர். ஜில்க்ஷி | ஆரையம்பதி RKM | 5A,2B,2C |
| 12. | ம. தனுஜா | ஆரையம்பதி RKM | 5A, 2B ,C,S |
| 13. | பா. நிரோஜன் | ஆரையம்பதி RKM | 6A, 2B,F |
| 14. | ஜெ. தனோஜன் | புனித மிக்கேல் கல்லூரி | 4A,3B,2C |
| 15. | ஆர். றஜிவினி | மட்/ வின்சன் மகளிர் உ. பாட | 5A,2B,2C |
| 16. | ஜெ. றிஜித்திரா | ஆரையம்பதி RKM | 6A,B,2C |
| 17. | ந. பத்மரூபன் | ஆரையம்பதி RKM | 4A,2B,2C,S |
| 18. | ர. ஜனார்த்தனா | ஆரையம்பதி RKM | 4A,2B,2C,S |
| 19. | கஜேந்தினி | ஆரையம்பதி மகா வித்தி. | 4A,B,2C,2S |
| 20. | சதுர்ஜிகா | ஆரையம்பதி மகா வித்தி. | 3A,3B,3C |
| 21. | சொப்ணா | மட்/ வின்சன் மகளிர் உ. பாட | 4A, 3B, 2C |
| 22. | வி. ஜனுசன் | கிரான் விநாயகர் வித்தி | 5A, B,C,2S |
| 23. | கா. தனேஸ்ராவ் | ஆரையம்பதி மகா வித்தி | 3A,B,2C,3S |
| 24. | ரி. மயூராஜனன் | மட்/ சிவானந்தா வித்தி | 4A,4C,S |
| 25. | எம். புவனகர்சன் | மட்/ சிவானந்தா வித்தி | 3A,3B,2C,S |

## கல்வி பொதுத்தராதர (உ/த) பரீட்சை - 2009

| பெயர் | பாடசாலை | பிரிவு | புள்ளி |
|---|---|---|---|
| 01. ம. கிருஷாந்தினி | மட்/ வின்சன் மகளிர் உ. பாட | விஞ்ஞா. | 21 |
| 02. சா.தினேஷாந்தினி | மட்/ வின்சன் மகளிர் உ. பாட | விஞ்ஞா. | 22 |
| 03. பா. கௌதனன் | புனித மிக்கேல் கல்லூரி | விஞ்ஞா. | 28 |
| 04. பா. பவித்திரா | மட்/ வின்சன் மகளிர் உ. பாட | விஞ்ஞா. | 67 |
| 05. மரியஹர்சினி | மட்/ வின்சன் மகளிர் உ. பாட | " | |
| 06. சயந்தன் | மட்/ சிவானந்தா வித்தி | விஞ்ஞா. | 97 |
| 07. தே. பிரியதர்ஷன் | புனித மிக்கேல் கல்லூரி | விஞ்ஞா. | 55 |
| 08. ஹரிப்பிரசாத் | மட்/ சிவானந்தா வித்தி | கணிதம் | 38 |
| 09. தே. தவேந்தர் | ஆரை/ இராமகிருஷ்ண மிஷன் | கலை | 04 |
| 10. வி. விவேகன் | ஆரை/ இராமகிருஷ்ண மிஷன் | கலை | 09 |
| 11. கி. சிவராஜ் | ஆரை/ இராமகிருஷ்ண மிஷன் | கலை | 15 |
| 12. பா. அரவிந்தன் | ஆரை/ இராமகிருஷ்ண மிஷன் | கலை | 18 |
| 13. யோ. அகிலேஸ் | ஆரை/ இராமகிருஷ்ண மிஷன் | கலை | 92 |
| 14. சிந்துஜா | ஆரை/ இராமகிருஷ்ண மிஷன் | கலை | 40 |
| 15. இ. தர்சினி | ஆரை/ இராமகிருஷ்ண மிஷன் | கலை | 77 |
| 16. மு. கீதா | ஆரை/ இராமகிருஷ்ண மிஷன் | கலை | 50 |
| 17. சு. அமலரூபி | ஆரை/ இராமகிருஷ்ண மிஷன் | கலை | 67 |
| 18. வி. ராகுலன் | ஆரை/ இராமகிருஷ்ண மிஷன் | கலை | 87 |
| 19. எம். பிரசன்னா | ஆரை/ இராமகிருஷ்ண மிஷன் | கணி | |
| 20. எஸ். பிறேம்ரூபேர் | மட்/சிவானந்தா வித் | கலை | 57 |
| 21. யு. சிந்துஜா | புனித சிசிலியா | " | 40 |

# கல்வியின் மேம்பாடு

கல்வியில் சிறந்த செல்வம் இல்லை - எப்போதும்
காசினி சொல்லும் இந்தச் சொல்லை
கல்வியில் சிறந்த அழகு இல்லை - இச்சொல்லை
கல்லார் என்றும் மறுத்ததே இல்லை

கல்வியில் சிறந்தோர் பெறுவர் புகழ்ச்சி - என்றும்
கல்வியை இழந்தோர் பெறுவர் தாழ்ச்சி
கல்வி கொடுக்கும் அறிவின் உணர்ச்சி - என்றும்
எல்லா வளமும் பெறுமே உயர்ச்சி.

- ஐ . மகேசானந்தம்



# ASDA - பற்றி

## என்னுடைய கருத்துக்கள் சில . . .

இலங்கையின் எப்பாகத்திலும் மட்டக்களப்பு என்ற பேச்சு எழுகின்ற போதெல்லாம் அங்கே ஆரையம்பதி என்ற சொல்லும் இங்கு வாழ்கின்ற மக்களும் அவர்களின் திறமை, பெருமை, வீரம் என்பதும் இயல்பாகவே எழுவது வழமையாகும். இத்தகைய புகழ்பெற்ற எமது கிராமம் இனவுரிமைக்காக நடாத்தப்பட்ட அகிம்சை வழிப்போராட்டத்திலும், ஆயுதவழிப் போராட்டத்திலும் பெரும் பங்களிப்பைச் செய்ததுண்டு. ஆயுதப் போராட்டத்திற்காக பெருமளவு போராளிகளை வழங்கியிருந்த போதும் எமது ஊருக்கு அதனால் நன்மை கிடைக்கவில்லை.மாறாகப் பல தீமைகளே ஏற்பட்டன. எமது ஊரைச் சேர்ந்த கல்விமான்களும் புத்திஜீவிகளும், கொல்லப்பட்டனர். எமது ஊரின் நலனுக்காக, அபிவிருத்திக்காக செயற்பட்ட அமைப்புக்களும், ஊர்ப் பற்றாளர்களும், கற்றோரும், திறன்படைத்தோரும் மௌனித்துச் செயற்பட்டார்கள். எல்லாவற்றையும் தீர்மானிக்கும் சக்தியாக ஆயுதக்குழுக்களே உருவாகின.

இந்த நிலையில் எமது ஊரின் கல்வி கலாசாராம், அபிவிருத்தி, பொருளாதாரம் என்பன மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. எமது பிரதேச எல்லைக்குட்பட்ட அரச காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டன. இவ்வாக்கிரமிப்புக்கு எமது பிரதேசத்தை நிர்வகித்த சுயநலமிக்க அரச அதிகாரிகளும் ஒத்துழைப்பு நல்கினர். மேலும் யுத்த சூழ்நிலையும் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த வரலாற்றுப் பின்னணியில், கடந்த மாரி மழையின் போது எமதூரில் டெங்கு நோயினால் பெறுமதிமிக்க நான்கு உயிர்கள் காவுகொள்ளப்பட்டதுடன் சுமார் 12 பேர் மயிரிழையில் உயிர் தப்பினர். இந்த டெங்கு நோய் பரவியபோது தான் மௌனித்திருந்த சமூக சிந்தனை கொண்டோரில் சிலர் ஒன்று சேர்ந்து பல்வேறு தடைகள் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரி, பொது சுகாதார உத்தியோகத்தர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் டெங்கு எதிர்ப்புப் புகை

விசிறலை தங்கள் சொந்தச் செலவில் செய்தனர். சில நாட்களில் ஒருவரின் இறுதிக் கிரியைகளை செய்ய முடியாத நிலை ஒரு குடும்பத்திற்கு ஏற்பட்ட போது அச்செலவுகளை எமது சமூக சேவையாளர்கள் ஒழுங்குகளை மேற்கொண்டனர். அவ்வேளை மேலும் ஒரு தரப்பினர் எங்களை முந்திக் கொண்டு இச்செலவுகளை ஏற்றுக்கொண்டு எங்கள் முன்மாதிரியை பின்பற்றினர். இதற்காக அவர்களை இச்சந்தர்ப்பத்தில் நாங்கள் மனம் திறந்து பாராட்டுகின்றோம்.

இத்தகைய சந்தர்ப்பங்களே எமது ஊருக்கென ஒரு சமூக சேவை அமைப்பை உருவாக்க எங்களைத் தூண்டியது. இதனால் சமூக சிந்தனை கொண்ட பலர் ஒன்று சேர்ந்து 15.03.2010 இல் எங்கள் ஆரையம்பதி சமூக அபிவிருத்தி அமைப்பை (அஸ்டா) உருவாக்கினோம். அன்றே எமது அமைப்பிற்கான இயக்குனர் சபை தெரிவு செய்யப்பட்டு 01.04.2010 இல் சட்ட ரீதியான சமூக சேவை அமைப்பாக பதிவு செய்யப்பட்டது.

எமது ஊருக்கான தேவை அபிவிருத்தியைப் பற்றி சிந்திப்பதற்குள் காங்கேயன் ஓடைக்கும், காத்தான்குடிக்குமிடையில் ஆற்றங்கரை ஓரமாக உவர் நீர் தடுப்புத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. இதன் மூலம் எமது ஊரவர்களின் பாரம்பரிய தும்புத்தொழில், மீன்பிடித் தொழில் என்பன பாதிப்படைய இருந்தது. இவ்விடயம் எமது கவனத்தை ஈர்த்து நாம் உடனடியாக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு உவர் நீர்த்திட்டத்தை காங்கேயனோடையில் ஒரு பகுதிக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தி எமது பாரம்பரிய தொழில்களை பாதிப்பில் இருந்து காப்பாற்றியுள்ளோம்.

அடுத்ததாக தற்போது இடம்பெற்று வரும் பிரதான வீதி நிர்மானத்தின் போது காத்தான்குடி கழிவு நீர் எமது பகுதிக்குள் வரும் வகையில் இரு ஊர்களுக்குமிடையில் வடிகான் இணைக்கப்பட இருந்தது. இதனை உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்து இரு ஊர்களுக்கும் இடையிலான வடிகால் தொடர்பை துண்டிக்கச் செய்துள்ளோம். ஊர் வீதியூடாக பஸ் போக்குவரத்தை நடைபெறச் செய்ய முயற்சி மேற்கொண்ட போதும் இன்னமும் அம்முயற்சி பூரண பயனைத் தரவில்லை.

எந்தவொரு பிரதேசத்திலும் ஊரின் மத்தியில் மக்கள் குடியிருப்புகளுக்கு அருகில் சேமக்காலை (சவக்காலை) அமைக்கப் படுவதில்லை ஊர்களின் ஒதுக்குப் புறங்களிலேயே பாரம்பரியமாக சேமக்காலைகள் அமைக்கப்படுவது வழக்கம். உதாரணமாக கடந்த காலங்களில் ஊர் வீதியையே ஒட்டி வாழ்ந்த ஆரையம்பதி, காத்தான்குடி மக்களின் சேமக்காலைகள் இன்றைய பிரதான வீதி (அன்று காட்டு ரோட்டு என அழைக்கப்பட்ட) க்கு அருகாமையிலேயே அமைந்திருந்தன. ஆனால் காலப்போக்கில் பிரதான வீதியின் கிழக்கே மக்கள் குடியேற்றத்தின் காரணமாக இச்சேமக்காலைகள் அகற்றப்பட்டு ஊர்களின் ஒதுக்குப் புறங்களான கடற்கரை பகுதிக்கு மாற்றப்பட்டன.

உத்தேசிக்கப்பட்டுள்ள சிகரம் மையவாடிப் பகுதி தாழ் நிலப்பிரதேசம் என்பதுடன் இதன் அயலில் பல குளங்களும், குடிநீர்க் கிணறுகளும் கோயில்களும் உள்ளன எனவே இம்மையவாடி அமைக்கப்படுமாயின் எதிர்காலத்தில் மக்களின் குடிநீரை இத்திட்டம் பெரும் பாதிப்புக்குள்ளாக்கும் சிகரம் உட்பட கோயில் குளம் பகுதியில் மக்கள் குடியேற்றம் மிக வேகமாக இடம்பெற்று வரும் பகுதியாகும். இன்னும் ஐந்து வருடங்களுக்குள் இப்பிரதேசம் மக்கள் குடியிருப்புக்களால் நிரம்பி விடும் என எதிர்பார்க்கலாம்.

மேலும் சிகரம் உட்பட்ட கோயில்குளம் பகுதி வரலாற்றுப் பின்னணியுள்ள இந்துக் கிராமமாகும். கி.பி. 328ம் ஆண்டு உலகநாச்சியார் எனப்படும் அரசியினால் அமைக்கப்பட்ட பழமை வாய்ந்த புகழ் பெற்ற கோயில் இங்கு இருந்துள்ளது. அந்நியர் ஆக்கிரமிப்புக்களின் போது சிதைவடைந்த இவ்வாலயத்தின் புராதன சின்னங்கள் சில வருடங்களுக்கு முன் கண்டெடுக்கப்பட்டு ஆரையம்பதி ஸ்ரீ கந்தசாமி கோயிலிலும் ஊரின் பல கோயில்களிலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இப்பிரதேசத்தில் இன்று காணப்படும் குளங்கள் பண்டைய காலத்திலிருந்தே அமைந்துள்ளன. எனவேதான் இப்பகுதி கோயில்குளம் என அழைக்கப்பட்டது.மேலும் இக்கோயிலின் கோபுரம் மிக உயர்ந்ததாக இருந்துள்ளது. இதனாலேயே சிகரம் என்ற பெயரும் இப்பகுதிக்கு வரலாயிற்று. (ஆதாரம் மட்டக்களப்பு மான்மியம்)

இந்நிலையில் இப்பகுதியில் புதிதாக மையவாடி அமைப்பது எவ்வகையிலும் நியாயமானதோ பொருத்தமானதோ அல்ல. நாங்கள் சிகரத்திலுள்ள முஸ்லிம்களுக்கோ, அல்லது இப்பிரதேசத்திலுள்ள ஏனைய முஸ்லிம்களுக்கோ எதிரானவர்களல்ல. இம்மையவாடி அமைவதால் ஏற்படப்போகும் சுற்றாடல், சமூக உளவியல் பிரச்சினைகள் காரணமாகவே சிகரத்தில் மையவாடி அமைவதை தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். இம்முயற்சி வெற்றி பெறும் என நம்புகின்றோம்.

கல்வி அபிவிருத்திக்கான முதல் முயற்சியாக இன்று இக்கௌரவிப்பு விழாவினை நடாத்துகின்றோம். இதனைத் தொடர்ந்து விரைவில் தேசிய பரீட்சைகளுக்கு தயார்படுத்தும் விஷேட வகுப்புக்களை விரைவில் நடாத்த இருக்கின்றோம். மேலும் எமது பிரதேசத்தில் உள்ள சகல பாடசாலை அதிபர்கள், விரிவுரையாளர்கள் ஏனைய கல்வியுடன் தொடர்புடையவர்களை ஒன்று சேர்த்து நீண்ட கால கல்வி அபிவிருத்தித் திட்டம் ஒன்றை உருவாக்க உள்ளோம்.

கலை, கலாசார மேம்பாடு தொடர்பாக நாட்டுக்கூத்து, கரகம், கும்மி, வில்லுப்பாட்டு மற்றும் தொடர்புடைய கலைஞர்களை ஒருங்கிணைத்து ஒரு செயற்திட்டம் ஒன்றை தயாரிக்க உள்ளோம். சுகாதார விழிப்புத் திட்டங்களையும், இலவச வைத்திய முகாம்களையும் நடாத்துவதற்கு உத்தேசித்துள்ளோம். வங்கிகளின் உதவி ஒத்துழைப்புடன் கால்நடை வளர்ப்பு, விவசாயம், மீன்பிடித் தொழிலாளர்களுக்கு ஊக்குவிப்பு வறுமை ஒழிப்புத் திட்டங்களை செயற்படுத்த உள்ளோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக பிரதேசத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை நோக்காகக் கொண்டு கிராமசேவையாளர்கள், பொறியியலாளர்கள், வைத்தியர்கள், நிர்வாகிகள் ஏனைய துறை சார் வல்லுனர்கள் நலன் விரும்பிகளின் ஒத்துழைப்பினையும் உதவிகளையும் பெற்று எமது பிரதேச நிலத்தையும், வளத்தையும் பயன்படுத்தி எமது பிரதேசத்திற்கான நீண்ட கால, இடைக்கால அபிவிருத்தித் திட்டம் ஒன்றை தயாரிக்க விரும்புகின்றோம். இவையெல்லாவற்றிற்கும் மண்முனைப்பற்று பிரதேசத்தில் உள்ள அனைவரதும் உதவி, ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் என நம்புகின்றோம்.

**தேசபந்து நடராஜா சுசாதரன்**
தலைவர், **ASDA**

# பணி செய்த பதிவுகள் சில . . .

டெங்கு ஒழிப்பு சிரமதான பணியில்
மண்முனைப்பற்று பிரதேச அதிகாரிகளுடன் பணியாளர்கள்





## ஆரையம்பதி வண்ணான் குளம் சிரமதான பணிகள்







# கணபதிப்பிள்ளை சபாரெத்தினம்

ஆரையம்பதி - 01

*பிறப்பு :* **05-04-1946**

*ஆற்றிய தொழில்* : அரச நிர்வாக உத்தியோகஸ்தர்

*ஈடுபாடு* : **ஆக்க இலக்கியம்**
**(சிறுகதை, கவிதை, கட்டுரை, நாடகம்)**

*சிறுகதைகள்* : **ஏற்றம் இறக்கம், தகுதி, விபரீதம், தொங்கு தோட்டமும் இறங்கு படிகளும், இலங்கை எம் தேசம் என்போம், மூன்று முகங்கள், மொஸ்கோ அனுபவங்கள், நல்வழி, சிறுகதைத் தொகுப்புக்கள். இவற்றிற்கான சாதனைகள், விருதுகள் பெற்றவர்.**

**இவை தவிர இவரால் 20க்கு மேற்பட்ட சிறுகதைகள், 50ற்கு மேற்பட்ட தமிழ்மொழி மூலக் கட்டுரைகள் ஆங்கில மொழி மூல கட்டுரைகள், நூல்கள், நாடகங்கள் இவரின் ஆக்கங்களாக வெளிக்கொணர்ந்தமைக்காக இவரின் பணி தொடர இவரை நாம் கௌரவிக்கின்றோம்.**

*"அறிவு நம்மை உயர்ந்த இடத்திற்கு ஏற்றுவதற்காக அமைக்கப்பட்ட சிறந்த ஏணியாகும்.*
*தவறு செய்வது மனித குணம் மன்னித்தல் தேவகுணம்"*

ஆரையம்பதி டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் நிகழ்வுகள் சில
உங்கள் பார்வைக்கு . . .







பாடசாலை சிரமதான நிகழ்வு - ASDA



வீதி துப்பரவின் போது - ASDA

# நன்றி

# நவில்கின்றோம்

எமது பிரதேசத்தில் கடந்த வருடம் டெங்கு நோயின் பாதிப்பு அதிகமாகக் காணப்பட்டது. அதன் விளைவாக நான்கு விலைமதிக்க முடியாத உயிர்கள் காவுகொள்ளப்பட்டதுடன் பத்திற்கும் மேற்பட்ட நோயாளர்கள் மயிரிழையில் உயிர் பிழைத்தனர். இதனைத் தொடர்ந்து எமது அமைப்பானது எமது ஊரில் இருக்கின்ற நண்பர்கள், நலன்விரும்பிகள், இளைஞர்கள் போன்றோரின் ஆதரவுடன் கிராமத்தை துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டோம். அதனைத் தொடர்ந்து புகையூட்டல் நடவடிக்கையினையும் மேற்கொண்டோம்.

இந்நிகழ்வின் போது எமது இம் மனிதநேயப் பணிக்காக மனமுவந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த அனைத்துத் தரப்பினர்களுக்கும் குறிப்பாக சுகாதார வைத்திய அதிகாரி ஆரையம்பதி, மாவட்ட தொற்று நோய் பிரிவு பொறுப்பதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், மண்முனை பிரதேச சபை, பிரதேச செயலகம், என்பவற்றிற்கும் எம் மனமார்ந்த நன்றிகளை இவ்விடத்தில் மீண்டும் பகிர்ந்து கொள்கின்றோம்.

நன்றி.

**ASDA**

ஆரையம்பதி.



## உங்கள் கவனத்திற்கு


### மரணித்துப் போன வரலாறு

ஐக்கிய இராச்சியத்தின் ஆளுகைக்குள் இலங்கை (அரசாங்க சபை) இருந்த போது 1934ம் ஆண்டு ஆகஸ்ட் 31ம் திகதி 8076ம் இலக்க அரசாங்க வர்த்தமானி அறிவித்தலை அப்போதிருந்த ஆளுநர் திரு.ஆர்.இ.ஸ்ரப்ஸ் அவர்களினால் இடாப்பு (ஆ)ல் ஆரைப்பற்றை கிராம எல்லையும், அதனுள் இடாப்பு (அ) இல் இறந்தவர்களின் ஓர் இடுகாடு அமைக்கப்படுகின்றது. என்கின்ற மாண்புமிகு ஆளுநரால் வெளிப்படுத்தப்பட்ட பிரகடனம் செய்யப்பட்டது. எமது தமிழினம் தனித்துவமாக ஆரையம்பதிக் கிராமத்தில் வாழ்ந்து வந்தமையை வரலாறு சான்று பகிர்கின்றது.


கால மாற்றத்தின் கீழ் 76 வருடங்கள் பின்னால் எமது சமூகம் வாழும் உரிமை மறுக்கப்பட்ட சமூகமாக எமது பாரம்பரியக் கிராமத்திலேயே வாழ்ந்தாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தோன்றியுள்ளது. இலங்கை சுதந்திரம் அடைந்த பின்பிலிருந்து இன்று வரை நடைமுறைப்படுத்தப்பட்ட நிர்வாக முறைமைகளினால் குறிப்பாக மண்முனை வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் இருந்த எமது கிராமம் ஆரையம்பதி 1, 2, 3 என்கின்ற கிராம சேவகர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தது. இலங்கை அரசின் கௌரவ ஜனாதிபதியாக இருந்த ரணசிங்க பிரேமதாச அவர்களினால் மக்கள் காலடிகளுக்கு நிர்வாகத்தினை எடுத்துச் செல்லும் முறைமையின் கீழ் தனி நிர்வாக அலகுகளாக "ஆரையம்பதி உதவி அரசாங்க அதிபர்" முறைமையில் கொண்டு வரப்பட்ட காரியாலயம் (திரு.டெலிமா 1வது, திரு.கருணாகரன் உதவி அரசாங்க அதிபராக பணி செய்தனர்) 1993ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ம் திகதி "மண்முனைப்பற்று பிரதேச செயலகம்" என்கின்ற அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டது மண்முனைப் பற்று பிரதேச செயலக முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தும் போது எங்களுக்கு 27 கிராம சேவையாளர் பிரிவுகள் இடம்பெற்றிருந்தன. ஒவ்வொரு

பிரிவுகளுக்கும் எல்லைகளும் தெளிவான வரைபடங்களும் இருக்கின்றன. தற்போது இவற்றில் ஆரையம்பதி கிழக்கு, செல்வாநகர் கிழக்கு, செல்வாநகர், கோயில்குளம், மண்முனை, தாழங்குடா, மாவிலங்குதுறை ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் முரண்பாடுகள் நிறைந்த கி.உ.பிரிவுகளாகக் காணப்படுகின்றன. இருப்பினும் ஆரைப்பற்றை கிழக்கு (இல: 157 C ) கிராம சேவையாளர் பிரிவை சற்று ஆராய்வோமானால்.

**ஆரையம்பதி கிழக்கு வரைபடம்**



## கர்பால ஆக்கிரமிப்பு வீட்டுத்திட்டம்




எம்வசம் தற்போது பேணப்படும் வரலாற்று ஆவனத்தின் படி 1934ம் ஆண்டு முழுமையாக தமிழர் பாரம்பரிய கிராமமாக ஆரையம்பதி இருந்திருக்கின்றது. இலங்கைத் தீவில் தனித்துவமாக வாழும் முஸ்லிம் இனம் அரசியல் முறைமையில் பங்கு கொண்டு இன்று வரை தனது குடிப்பரம்பரையை நன்கு திட்டமிட்டு வியாபித்திருக்கின்றது.

மேற்படி வியாபித்தலின் போது எமது எல்லைகள் மாற்றப் பட்டிருப்பதனை நன்கு விளங்கிக் கொள்ளமுடிகின்றது. உதாரணம் கிராம ஆட்சி மன்றத்தின் சுகாதார சபை எல்லை, மண்முனைப்பற்று பிரதேச சபை எல்லைகள் பற்றி ஆராய்வோமானால் நன்கு விளங்கிக்கொள்ள முடியும். மற்றும் பி.பி. மட" 36 (Tracing) ஆதாரமாக முன் வைக்கின்றேன். பின்னர் 2004ம் ஆண்டு பின்பகுதியில் எமது கிராமத்தினர் சமய மற்றும் அந்திமகாலக் கிரியை நிகழ்வுகளை நடாத்துவதற்காக கால காலமாக பயன்படுத்தி வந்துள்ள கடற்கரைப் பிரதேசமும் காத்தான்குடி முஸ்லிம்களினால் ஆக்கிரமிக்கப் பட்டது. அதன்போது எமது ஊர் சார்பாக ஏற்பட்ட பதட்ட நிலையை கருத்தில் கொண்டு பிரதேச செயலாளரை ஒரு சுமுகமான தீர்வு நாடி கொடுக்கப்பட்ட எழுத்து மூலமான ஆவணங்களை சமர்ப்பிக்கின்றோம்.



உ

சிவமயம்

# ஆரையம்பதி ஸ்ரீ கந்தசுவாமி கோவில்
# ஸ்ரீ கண்ணகை அம்மன் கோவில்,
# ஸ்ரீ காளி அம்மன் கோவில் பரிபாலன சபை.

## Arayampathi Sri Kandaswamy Kovil
## Sri Kannagai Ambal Kovil,
## Sri Kaleyambal Kovil Paripalana Sabai.

ஆரம்பம் 1972-09-17 பதிவு இலக்கம்: 6/2/BT/1/8

| தலைவர்: | பொருளாளர்: | செயலாளர்: |
| --- | --- | --- |
| திரு. தி. கனகலிங்கம் | திரு. ய. துஷ்யந்தன் | திரு. கோ. மகேஸ்வரன் |
| | T.P. 0776313732 | |

22.09.2004

பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
மண்முனைப்பற்று,
ஆரையம்பதி.

ஐயா!

எமது ஆலய நிர்வாகத்தின் கீழ் உள்ள, ஸ்ரீ நரசிங்கர் ஆலயம் அமைந்துள்ள காணியில், அத்துமீறிய முஸ்லிம் குடியேற்றத்தை தடுத்து நிறுத்துதல்.

மேற்படி விடயம் சம்பந்தமாக 10.06.2004 ம் திகதி எமது ஆலய பரிபாலன சபையினர் எழுத்து மூலமாக தங்களுடன் தொடர்பு கொண்ட போதும் தாங்கள் இன்று வரை எமக்கு எதுவிதமான பதிலையும் அறிவிக்கவில்லை.

எமது பிரதேச செயலாளராகிய தங்களின் நடவடிக்கை எம் மக்களுக்கு வியப்பை அளிக்கின்றது. இக் காலப் பகுதியில் கடற்கரைப் பகுதியில் எமது ஆலய பராமரிப்பில் இருந்த காணி, காத்தான்குடி முஸ்லிம் நபர்கள் சிலரால் சிறு சிறு துண்டாகப் பிரிக்கப்பட்டு தற்போது இப்பகுதியில் குடியேற்றம் நடைபெற்று வருகின்றது. இச் செயல் மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்.

எனவே இச் செயலை உடனடியாக தடுத்து நிறுத்தி எமக்கு தகுந்த தீர்வினைப் பெற்றுத் தருமாறு தங்களை தயவாய் வேண்டுகின்றோம்.

நன்றி.

Kandaswamy, Kannagai, Kaleyambal Paripalana Sabai
Y. Thushyanthan
Treasurer

செயலாளர்
ஆரையம்பதி ஸ்ரீ கந்தசுவாமி கோவில்
ஸ்ரீ கண்ணகை அம்மன் கோவில்
ஸ்ரீ காளி அம்மன் கோவில்
பரிபாலன சபை

~ என்கடன் பணி செய்து கிடப்பதே ~

அதன் பின்னர் அதிமேதகு ஜனாதிபதி மஹிந்தராஜ பக்ஷ அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆவணம் :



உ
சிவமயம்

**ஆரையம்பதி ஸ்ரீ கந்தசுவாமி கோவில்**
**ஸ்ரீ கண்ணகை அம்மன் கோவில்,**
**ஸ்ரீ காளி அம்மன் கோவில் பரிபாலன சபை.**
**Arayampathi Sri Kandaswamy Kovil**
**Sri Kannagai Ambal Kovil,**
**Sri Kaleyambal Kovil Paripalana Sabai.**

ஆரம்பம் 1972-09-17 பதிவு இலக்கம்: 6/2/BT/1/8

| தலைவர் | பொருளாளர் | செயலாளர் |
|---|---|---|
| | | |

21.02.2007

அதிமேதகு சனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்கட்கு,
ஐயா,

**மண்முனைப்பற்று பிரதேச செயலக வடக்கு எல்லையை உறுதிப்படுத்தலும், நடைமுறைப்படுத்தலும்.**

எமது மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள மண்முனைப்பற்று பிரதேச செயலக பொதுநிருவாக கட்டமைக்குட்பட்ட நிலப்பகுதியினுள் காத்தான்குடி பிரதேச செயலகம், பிரதேச சபை என்பன நிருவாகம் செய்வதனை மண்முனைப் பிரதேச சபையும், மண்முனைப்பற்று பிரதேச செயலகமும் வேடிக்கை பார்த்து வருகிறது.

இந்நிலையில் இப்பிரச்சினைக்கு மண்முனைப்பற்றின் பொதுமக்களாகிய நாங்கள் ஒரு தீர்வினை பெறும் முகமாக பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து இன்றிலிருந்து 21.02.2007 தொடக்கம் பிரதேச செயலகம் முன்னால் சுழற்சி முறையிலான ஒரு உண்ணாவிரத போராட்டத்தை நடாத்திவருகின்றோம்.

1. மண்முனைப்பற்றின் பிரதேச செயலக வடபுற எல்லையை பிரதேச செயலகம் உருவாக்கப்படும்போது அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வரைபடம் மூலம் உறுதிப்படுத்தலும் நடைமுறைக்கு கொண்டு வருதலும்.

2. மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தின் 27 கிராம சேவையாளர் பிரிவுகளில் ஒன்றான ஆரையம்பதி கிழக்கு இல. 157 C கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட நில நிலப் பரப்பினுள் காத்தான்குடி கிராமசேவையாளர் கடமை செய்வதனை உடனடியாக தடை செய்தல்.

3. ஆரையம்பதி கிழக்கு இல. 157 C கிராமசேவையாளர் பிரிவினுள் காத்தான்குடி பிரதேச செயலகத்தினால், காத்தான்குடி நகர சபையினால் மேற்கொள்ளப்பட்ட அந்நிய அரச பொதுநிருவாக, உள்ளூராட்சி மன்றங்களின் அனைத்து நடவடிக்கைகளும் உடன் நிறுத்தப்பட்டு அதன் அனைத்துப் பொறுப்புக்களும் மண்முனைப்பற்று அரச பொது நிருவாக, உள்ளூராட்சி மன்றத்திற்கு வழங்க நடவடிக்கை எடுத்தல்.


4. விசாரணைக் கொமிசன் ஒன்றினை நிறுவி ஆரையம்பதி கிழக்கு இல. 157 C கிராமசேவையாளர் பிரிவினுள் காத்தான்குடி பிரதேச செயலகத்தில் கடமைபுரியும் கிராம சேவையாளர் தனது கடமையை மேற்கொண்டு இல.157C கிராம சேவையாளர் பிரிவில் இரண்டு கிராமசேவையாளர் தங்களது கடமையினை மேற்கொள்வதற்கு அனுமதித்து அரச பொதுநிருவாகத்தினதும், மக்களினதும் இயல்பு வாழ்வும் சீர்குலைவதற்கு காரணமாக இருந்த அரசாங்க அதிகாரிகள்மீது விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுத்தல்.

செயலாளர்
ஆரையம்பதி ஸ்ரீ கந்தசுவாமி கோவில்
ஸ்ரீ கண்ணகை அம்மன் கோவில்
ஸ்ரீ காளி அம்மன் கோவில்
பரிபாலன சபை

பிரதிகள்:
01. அரசாங்க அதிபர், மட்டக்களப்பு.
02. பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.
03. ஆளுநர், கிழக்கு மாகாணம்.
04. உள்ளூராட்சி ஆணையாளர்.
05. பிரதேச செயலாளர், மண்முனைப்பற்று.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தகமானியின் பிரகடனத்தின் படி 1997.07.04 Act No 58 of 1992

**வடக்கே எல்லை வரைபடம்**




Vide Part 1 : Sec (1) –Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka –1997.07.04 Act No :58 of 1992

இப்பிரதேசமானது இப்பிரதேசத்தில் கடமை புரிந்த கிராம சேவையாளரினால் எல்லைகள் தெளிவாக இனம் காணப்பட்டுள்ளது. MADA / MNM/ 2004/202

2004ம் ஆண்டு மேற்படி எல்லைகளினுள் குடியிருக்கும் மக்களின் நலனோம்பு நடவடிக்கையினை ஏன் கிராமசேவை உத்தியோகத்தர் செய்ய வில்லை. என்ற வினா எழுப்பப்படுகிறது? ஒரு விடயத்தை பார்த்தோமேயானால் தர்க்க ரீதியாக அக்காலப்பகுதியில் 20 வருடங்களுக்குப் பின்னர் புள்ளி விபரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட குடிசன மதிப்பீடு – 2001 இல் தெளிவாக எல்லை குறித்து காட்டிய ஆரையம்பதி கிழக்கின் (157C) கிராமசேவையாளர் 2001இல் இக்கிராம சேவையாளர் பிரிவில் நிரந்தரமாக வசித்த மக்களையும், வீட்டுக்கூறுகள், கட்டடக்கூறுகளை ஏன் கணக்கிட வில்லை என்கின்ற யதார்த்தம் ஆராயப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. 2001இல் அவர் கணக்கிடவில்லை எனில் அப்பகுதி 2001இல் மக்கள் குடியிருப்பற்ற வெற்றுப் பிரதேசமாக காணப்பட்டதா என்ற வினா எழுகின்றது.

இது உண்மை எனில் சுனாமியின் பின்னர் தான் இப்பகுதியில் முஸ்லிம் குடியேற்றம் பாரிய அளவில் நடாத்தப்பட்டிருக்கின்றது. ஆதாரம் 28.02.2005 பத்திரிகை.

**பத்திரிகை செய்தி இணைப்பு :**

# பாதிக்கப்பட்ட பகுதிகளும் விட்டுப்போன நிவாரணமும்

சுனாமி இயற்கை அனர்த்தத்தால் பாதிப்புக்குள்ளன சகல பகுதிகளுக்கும் நிவாரணம் அவசியமாக உள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளை அறியாது அதற்கு பல காரணங்களை கூறி நிவாரணம் வழங்க மறுத்து ஒதுக்கி விடுவதென்பதையும் அனுமதிக்க முடியாது.

ஆனால் காத்தான்குடியில் சில இடங்களில் மேற்படி நிலைமைகளை அவதானிக்க முடிகின்றது. பாய்ந்து வந்த கடல் நிருக்கு எல்லை போட்டு நிவாரணம் வழங்கிய அமைப்புகளும், நிறுவனங்களும் அரச அதிகாரிகளும் இக்கட்டுரைக்கு காரணமான பகுதியை கவனிக்கத் தவறியது வேதனை தரும் விடயமாகும். கடல்நீர் வந்த பகுதி, கடல்நீர் வராத பகுதி என அடையாளப் படுத்தியவர்கள் கர்பலா வீதியை அண்டிய மேற்கு பகுதியை சற்று உற்று நோக்க தவறிவிட்டனர். என்றே சொல்ல வேண்டும்.

இவ்வீதியின் கிழக்குப் பகுதி (வீதியின் ஓரமாய் அமைந்த வீடுகள் உட்பட) 167பீ கிராம சேவகரின் பகுதிகளை முற்று முழுதாக முடிக்கும் பகுதி என்பதால் அப்பகுதியின் பக்கத்திற்கு முற்று முழுதாக நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் 167டீ கிராம சேவகருக்கு உட்பட்ட வீதியின் மேற்கு பகுதிகள் கிழக்குப் பகுதியை விட சற்று அதிகமான பாதிப்புள்ள பகுதியாகும். அதன் காரணம் இப்பகுதியில்தான் நிறைந்த பள்ளமும் வாய்க்கால் வழியும் காணப்படுகின்றன. அதனால்தான் இப்புகுதிகளில் கடல்நீர் வேகமாக ஊடுருவி வீடுகளுக்குள் சுமார் ஒரு அடிமுதல் இரண்டு அடிவரை உட்புகுந்தது.

கர்பலா நகருக்கும் நதியா கடற்கரைக்கும் இடைப்பட்ட குடியிருப்பு இல்லாத சமவெளியாகும். வேகமாய் வந்த கடல்நீர் 'ஈனிஸியர்' குளத்துடன் கலந்து குளம் பெருக்கெடுத்து விக்டரி மைதானம் வழியாக அதிக நீர் ஊடுருவி வரைபடத்தில் வட்டமிடப்பட்ட பகுதியில் நூறுவீதமும் மற்ற பகுதியில் ஐம்பது வீதமும் ஈனிஸியர் குளத்தின் தாக்கம் ஏற்பட மற்ற பகுதிகளால் வந்த கடல் நீரின் தாக்கமும் கலந்து பாதிப்பை ஏற்படுத்தியது. இதற்கு நல்ல சான்றாக நூறானியா வித்தியாலய கட்டடத்தில் சுமார் இரண்டடி அடையாளத்தை கடல்நீர் இட்டுச் சென்றிருக்கின்றது.

இந்த ஈனிஸியர் குளத்தால் ஏற்பட்ட பாதிப்புக்களை நன்கு உணர்ந்த அப்பகுதி ஆரையம்பதி கிராம சேவகர் நன்கு செயற்பட்டு அப்பகுதி மக்களுக்கு சுமார் ஆயிரம் மீற்றர் வரை நிவாரணம் கொடுத்திருப்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இங்கு இதை எவரும் கவனிக்கத் தவறிவிட்டனர். எங்கும் எவரும் மெச்சத்தக்க வகையில் சிறந்த பணிவிடைகளையும் பாதிக்கப் பட்டவர்களுக்கு மேலான சேவையினையும் செய்து யாவரும் பாராட்டும் வகையில் செயலாற்றிவரும் காத்தான்குடி முஸ்லிம் சம்மேளனம் கூட இதை சிந்திக்கத் தவறிவிட்டனர். இது இப்பகுதி மக்களால் பெரும் குறையாகவே நோக்கப்படுவதை அவரகளின் பேச்சுக்களில் இருந்து காணக்கூடியதாக உள்ளது. உண்மையில் இப்பகுதி மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை தீர்த்து வைப்பதும் சம்மேளனத்தின் பொறுப்பாகவும் உள்ளது.

ஆகவே சம்மேளனம் இவர்களுக்கு நல்ல தீர்வை பெற்றுக் கொடுப்பதும் கிராம சேவகர் நன்கு செயற்பட்டு குறைந்தபட்சம் தொழில் ரீதியாக பாதிக்கப்பட்டு இருக்கும் இப்பகுதி மக்களுக்காக பாடுபட்டு சேவை செய்து நஷ்டஈட்டை பெற்றுக்கொடுக்க முயற்சிப் பதும் அவரின் கடமையாகும்.

குஷ்னீக் எம். தௌபீக்

எனவே இலங்கைத்தீவில் ஆயுதம் மோதல் அரசாங்கத்தினால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. என அறிவிக்கப்பட்ட பின்னர் ஏனைய சமூகத்தினரும் தங்கள் பாரம்பரிய இடங்களில் மீளக் குடியேறும்போது தமிழ்க்கிராமங்களில் தமிழர்கள் அவர்களுக்குரிய பாரம்பரிய விழுமியங்களுடன் தனித்துவமாக வாழும் உரிமையை தனித்துவமான முஸ்லிம் சமூகமும் ஏற்றுக் கொள்ளவேண்டிய யதார்த்த நிலை உள்ளது.

கால நீரோட்டத்தில் 2010இல் நாங்கள் முரண்பாடுகளுடன் வாழும் நிலை இன்றுள்ளது. இந்நிலையை கொண்டு வந்து விட்ட பெருமை இப்பிரதேச அரச அதிகாரிகளையும், அரசியல்வாதிகளையுமே சாரும். இதன் பிராயச்சித்தமாக இம்முரண்பாடுகளுக்கு தீர்வு காணும் பொறுப்பும் இவர்களுக்கே உரித்துடையதாக இருக்கின்றது.

இன்றுள்ள சூழ்நிலையில் இங்கு வாழ்ந்த, வாழ்கின்ற மக்களைப் பற்றி வாழ்கின்ற சந்ததியோ அறிந்து கொள்ள முடியாத இருட்டுத்திரை மூடி இருப்பதனை நாம் ஒப்புக் கொண்டேயாக வேண்டும். இத்திரை தொடர்வதற்கு ஒரு முக்கிய காரணி சமூதாயத்துள் தொடர்கின்றது. முதலில் இந்தத் தடையைத் தாண்ட வேண்டும். தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் முறையினை பயன்படுத்தி மேற்படி ஆரையம்பதி கிழக்கு பிரதேசத்தில் இருக்கின்ற முரண்பாடுகளுக்கு ஒரு தீர்வினை எட்ட வேண்டிய நிலையினை மக்கள் ஏற்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

<u>*நன்றி*</u>

**– கருடன்**



# ASDA

# Award - 2010

## நன்றி நவிலல்

பல்வேறு பட்ட வேலைப்பளு, சிரமங்களுக்கு மத்தியிலும் இப்பரிசளிப்பு நிகழ்வில் கலந்து சிறப்பித்த பிரதம விருந்தினர்கள், கௌரவ விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், கல்விச சாதனையாளர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் விழா நிகழ்வில் கலந்து சிறப்பித்த பொது மக்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வ நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்விழா சிறப்பாக நடைபெறுவதற்கு இம்மண்டபத்தினை வழங்கி உதவி புரிந்த கல்வியியற் கல்லூரி " பீடாதிபதி " திரு.ரி. பாக்கியராசா, மற்றும் அதன் உத்தியோகத்தர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

மற்றும் இவ்விழாவில் ஊடக அனுசரணையாளர்கள், பத்திரிகையாளர்கள், நிகழ்வினை பதிவுகளாக்கிய தொழிநுட்பவியலாளர்கள், ஒலி, ஒளி பெருக்கி ஒத்துழைப்பாளர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

எமது *ASDA* பணிக்கு ஆரம்பத்திலிருந்து ஊக்கமளித்து இன்று வரை தோளோடு தோள் நின்று உதவிகளை நல்கி வருகின்ற அனைத்து *ASDA* நல் உள்ளங்களுக்கும் எமது நிகழ்வினை சிறப்பாக அச்சேற்றிய மட்டக்களப்பு நியூ கீன் அச்சகத்தினருக்கும் எமது ஞாபகங்களுள் எட்டாமல் தவறுதலாக எவரையும் குறிப்பிடாமல் விட்டிருப்பின் அவ்வனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது அமைப்பு சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


நன்றி

**ASDA**


Tel : 0776514648
ரமணி ஜுவலர்ஸ்
Dealers in 22kt genuine Gold Jewell
Ramani Jewellers
அழகிற் சிறந்த பவுண் தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்
ஓடர் நகைகள் குறித்த காலத்தில்
உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.
இவையனைத்திற்கும்
இன்றே நாடுங்கள்.
ரமணி ஜுவலர்ஸ்
பிரதான வீதி, ஆரையம்பதி,
மட்டக்களப்பு.

Latha Hardware
& Electricals
Home Delivery
மெயின் வீதி, ஆரையம்பதி.
Tel: 060-2659837, 065-2247199, Mob: 0771144946
சகல விதமான கம்பி வகைகள், பிளம்பிங் சாமான்கள்,
பெயின்ட் வகைகள், மின்சார உபகரணங்கள்
இவற்றுடன் கல், மண், சீமெந்து போன்ற வீடு கட்டுவதற்குரிய
சகல விதமான பொருட்களையும் எங்களிடம் மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

# London Guest House
## (PVT) LTD.





No .103, Rest House Road,
Kalmunai, (Sri Lanka) E.P
Tel : 067 - 2224525,
Fax : 067 - 2224639
Mobile : 077 - 9712156, 072- 3913652

*Normal and Air Conditioned - Single, Double and Family Rooms are available with Meals in a very Good Surroundings.*

தனியாகவும், குடும்பத்தாருடனும் தங்குவதற்கு
ஏற்ற சாதாரண மற்றும் குளிரூட்டப்பட்ட அறைகள்,
அமைதியான சூழலில்
ருசியான உணவு வசதியுடன் உள்ளன.




நியூ கீன் மட்டக்களப்பு. 065-2222204